## III. மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

1972 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் நிதிக்கணக்குகள் பின்னிணைப்பு 11 இன் அட்டவணை 19 இற் கொடுக்கப்பட்டுள்ளன. 1972, திசெம்பர் இறுதிக்குரியனவற்றை 1971 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து உள்ள முக்கிய மாற்றங்கள் :

| | மாற்றம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) |
|---|---|
| மொத்தக் கேள்விப் பொறுப்புக்கள் ... .. | + 279.9 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள் ... .. | + 159.7 |
| கேள்வி வைப்புக்கள் ... .. | + 101.8 |
| வெளிநாட்டிலிருந்துபெற்ற கடன்பாடுகள் .. .. | + 18.4 |
| பன்னாட்டு ஒதுக்கு நிதி ... .. | + 47.2 |
| உள்நாட்டு இருப்புச்சொத்துக்கள் ... .. | + 135.3 |

\+ ஏற்றம்.

இவ்வாண்டில் ஸ்ரேலிங், இந்திய ரூபாய்கள், ஐ. அ. டொலர்கள் ஆகிய வற்றிற்கான மத்திய வங்கி வீதங்கள் திருத்தியமைக்கப்பட்டன. ஆண்டு முடிவில், வீதங்கள் பின்வரும் முறையில் அமைந்திருந்தன.

| | தந்தி மாற்றங்கள் கொள்வனவுகள் | தந்தி மாற்றங்கள் விற்பனவுகள் |
|---|---|---|
| ஸ்ரேலிங் | | |
| (100 உக்கு) உடன்மாற்று | ரூ. 1559 7/8 | ரூ. 1561 3/8 |
| பின்மாற்று (ஆறு மாதங்கள் வரை) | உடன்மாற்றுக்கு எதிராக மாதந் தோறும் ரூபாய் ஒன்றில் 21/32 கழிவு. | உடன்மாற்றுக்கு எதிராக மாதந் தோறும் ரூபாய் ஒன்றில் 21/32 மிகை மதிப்பு. |
| இந்திய ரூபாய் | | |
| (100 உக்கு) உடன்மாற்று | ரூ. 82 3/4 | ரூ. 82 13/16 |
| பின்மாற்று (ஆறு மாதங்கள் வரை) | உடன்மாற்றுக்கு எதிராக மாதந் தோறும் ரூபாய் ஒன்றில் 1/32 கழிவு. | உடன்மாற்றுக்கு எதிராக மாதந் தோறும் ரூபாய் ஒன்றில் 1/32 மிகை மதிப்பு. |
| ஐ. அ. டொலர்கள் | | |
| (100 உக்கு) உடன்மாற்று | ரூ. 669 1/4 | ரூ. 669 1/2 |
| பின்மாற்று (மூன்று மாதங்கள் வரை)* | ரூ. 669 1/4 | உடன்மாற்றுக்கு எதிராக மாதந் தோறும் 50 சதம் மிகை மதிப்பு. |

*மத்திய வங்கிக்குச் செய்யும் சிறப்பு விண்ணப்பத்தின் பேரிலேயே மூன்று மாதத்துக்கு மேலானதான ஆனால் ஆறு மாதத்திற்கு உட்பட்டதான காலத் தவணை வழங்கப்படும்.

மத்திய வங்கியின் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் பின்னிணைப்பு 11 இன் அட்டவணை 24இல் காட்டப்பட்டுள்ளன.

அரசாங்கப் பிணைகளையும், வர்த்தக உற்பத்திக் கடன்கள் தொடர்பான கடன் வாக்குறுதிச் சான்றிதழ்களையும் துணையாகக் கொண்டு அளிக்கப்பட்ட முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம் ஆண்டுக்கு 6½ சதவீத மாக மாற்றமுறாது காணப்பட்டது. உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழான கொள்வனவிற்கும், உள்ளூரிற் பயிரிடப்பட்ட விவசாயப் பொருட்களின் கொள்வனவு விற்பனவு. அல்லது களஞ்சியப் படுத்தல் என்பவற்றிற்கும், நிதியீட்டுவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பாக, கடன் வாக்குறுதிச் சான்றிதழ்களை ஆதாரமாகக் கொண்டு வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கியின் முற்பணங்கள் மீதான வட்டிவீதம் ஆண்டுக்கு 3 சதவீதமாக மாற்றமுறாது காணப்பட்டது. நெல், மரக்கறிகள், ஏனைய சிறப்பான பயிர்களின் உற்பத்தி தொடர்பாகக் கூட்டுறவுச்சங்கங்களின் கடன் வாக்குறுதிச் சான்றிதழ்களை ஆதாரமாகக் கொண்டு வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிடம் பெற்ற முற்பணங்களின் வட்டிவீதம் தொடர்ந்து ஆண்டுக்கு 1½ சதவீதமாக இருந்தது. ஆனால், இவ்வசதியைப் பயன்படுத்திக் கொள்ளும் வர்த்தக வங்கிகள் வாக்குறுதிச் சான்றிதழ்களில், வரைவோரிடம் ஆண்டிற்கு 8 சதவீதத்திற்கு மேல் (குறித்த திகதிகளில் திருப்பிப் பணம் கொடுக்கப்பட்டவிடத்து 3 சதவீதம் கழிவுக்குட் பட்ட) வட்டி அறவிடக்கூடாது. மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களுக் கான கழிவு வீதம் கடைசியாக ஏற்கப்பட்ட சராசரிக் கேள்வி வீதத்திலிருந்து ஆண்டுக்கு 1/8 சதவீதமாகத் தொடர்ந்திருந்தது.

### வெளிநாட்டு நாணயத்தாள்கள்

மத்திய வங்கி, இலங்கையின் தொழிற்படும் வர்த்தக வங்கிகளிடமிருந்து குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களைக் குறிக்கப்பட்ட விலைகளில் தொடர்ந்து கொள்வனவு செய்துவந்தது. மத்திய வங்கி, குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களைக் குறிக்கப்பட்ட விலைகளில் வர்த்தக வங்கி கட்கு விற்பனைக்கு வழங்கியது.

### கொடுகடன் உத்தரவாதத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் நெல், மரக்கறிகள் ஏனைய சிறப்பான பயிர்கள் என்பவற்றின் உற்பத்திகளுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கட்கு வர்த்தக வங்கிகள் வழங்கும் கடன்களின் செலுத்தத் தவறிய கடன்களில் 75 சதவீதத்தை அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கி ஈடு செய்ய உத்தரவாதம் அளித்து வரு கின்றது. உத்தரவாதக் கட்டணமாக வர்த்தக வங்கிகள் ½ சதவீதம் செலுத்த வேண்டும். 1972ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகளால் கடன்களாக வழங்கப்பட்ட ரூ. 35,471,000/- இற்குமத்திய வங்கி உத்தரவாதம் அளித்தது

**நடுத்தர நீண்ட காலத் தவணைக் கொடுகடன்**

நடுத்தர நீண்டகாலத் தவணைக்கொடுகடன் திட்டத்தின் கீழ் மத்திய வங்கியினல் கொடுகடன் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள நிதியீட்டற் கடன்களின் மீதான வட்டி வீதங்கள் மாற்றமுருது பின்வரும் முறையில் அமைந்திருந்தன.

(அ) விவசாயம் அல்லது கைத்தொழிற்றுறையின் வளர்ச்சிக்கு அல்லது அபிவிருத்திக்கு ஆண்டுக்கு $6\frac{1}{2}$ சதவீதம்.

(ஆ) தேயிலைக் கட்டுப்பாட்டாளர் வட்டித் தொகையில் ஒரு பகுதியினைக் கொடுக்குங்கால், தேயிலைத் தொழிற்சாலையைப் புதுப்பிக்கவும் அல்லது புதிய தொழிற்சாலையை அமைக்கவும்.

(i) உள்ளூர்ச் செலவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 6 சதவீதம்.

(ii) வெளிநாட்டுச் செலாவணிச் செலவுகளுக்கு ஆண்டுக்கு 8 சதவீதம்

(இ) வாணிபம் அல்லது வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் வளர்ச்சிக்கு அல்லது அபிவிருத்திக்கு ஆண்டுக்கு $7\frac{1}{2}$ சதவீதம்.

கொடுகடன் நிறுவனங்களுக்கு இவ்வாண்டில் ரூ. 10,169,000/- பெறுமதியான மீள நிதியீட்டற் கடன்கள் வழங்கப்பட்டன.

**நாணய வெளியீடு.**

1972 ஆம் ஆண்டிறுதியில் சுற்ருேட்டத்திலிருந்த மொத்த நாணயம் ரூபா 14,448 இலட்சமாகும். இது, 1971 ஆம் ஆண்டிறுதியிலிருந்த தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ. 1,597 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக்காட்டுகிறது. நாணயத் தாள்களின் சுற்ருேட்டத்தில் ரூ. 1,570 இலட்சங் கொண்ட அதிகரிப்பும், நாணயக் குத்திகளின் சுற்ருேட்டத்தில் ரூ. 27 இலட்சம் கொண்ட அதிகரிப்பும் ஏற்பட்டன. ரூ. 100/-, ரூ. 50/- இனத்தாள்களின் சுற்ருேட்டத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்காணப்பட்டுள்ளது. உதாரணமாக, ரூ 100/- இனத்தாள்களில் ரூ. 1,112 இலட்சமும், ரூ. 50/- இனத்தாள்களில் ரூ. 384 இலட்சமும் சுற்ருேட்டத்திலிருந்தன. அதேவேளையில் குறைந்த இனத்தாள்கள் அநேகமாக அதே மட்டத்திலேயே இருந்தன. இவ்வதிகரிப்பு 1972 ஆம் ஆண்டிறுதிப்பகுதியில் ஏற்பட்ட வணிக வங்கிகளின் வேலை நிறுத்தத்தினுல் ஏற்பட்டதாகும். ஆய்வுக்குரிய ஆண்டில் புதிய தாள்களும் குத்தி நாணயங்களும் வெளியிடப்படவில்லை.

**வங்கிப்பற்று வரிகள்**

வங்கிப் பற்று வரிகள் சேகரிப்பினை மத்திய வங்கி தொடர்ந்து நிருவகித்து வந்தது.

**கட்டாய சேமிப்புகள்**

1971 ஆம் ஆண்டின் கட்டாய சேமிப்புச் சட்டம் இல. 6 இன்படி திரட்டப்பட்ட கட்டாய சேமிப்பு நிதியின் பணங்களுக்கு மத்திய வங்கி பாதுகாவலராக விளங்கியதுடன், அரசாங்கத்திற்காகக் கட்டாய சேமிப்பு நிதியை நிருவகித்தும் வந்தது.

**வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம்**

அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தினை மத்திய வங்கி தொடர்ந்து நிருவகித்து வந்தது.

**வருமானமும் செலவீடும்**

மத்திய வங்கியின் இவ்வாண்டு வருமானம் ரூ 85,238,000 ஆகும். ஒதுக்குகளுக்கு வைக்கப்பட்டவையும், வங்கிக்கட்டடம் அலுவலகத் தளபாடங்கள் ஆகியவற்றின் பெறுமானத் தேய்விற்காக ஒதுக்கப்பட்டவையும், உள்ளடக்கிய செலவீடு ரூ 84,238,000 ஆகும். நாணய விதிச் சட்டத்தின் 39 (ஆ) பிரிவின்படி தேறிய இலாபம் ரூ. 1,000,000 மிகைக் கணக்குக்கு எடுந்துச் செல்லப்பட்டது.

**வங்கி மேற்பார்வை**

நாணய விதிச் சட்டத்தின் 29 (1) ஆம் பிரிவின் கீழ் 1972 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஏழு வர்த்தக வங்கிகளை மேலாய்வு செய்தது. இவற்றில் ஆறு வங்கிகளின் மேற்பார்வை இவ்வாண்டில் முடிவடைந்தது. வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக வங்கி மேற்பார்வைகள் தொடர்பான வேலை 1972 செத்தெம்பர்—திசெம்பரில் தடைப்பட்டது.

1970 ஆம் ஆண்டின் வங்கிப் பற்றுக்கள் வரிச் சட்டம் இல. 27 நிர்வாகத்துடன் தொடர்புடைய செயலாற்றங்களை இத்திணைக்களம் நிறைவேற்றியது. மத்திய வங்கியின் நடுத்தர நீண்டகாலத் தவணைக் கொடுகடன் நிதியிலிருந்து வழங்கப்பட்ட மீள நிதியீட்டம்பற்றிய கடன்களின் மதிப்பீட்டில் அபிவிருத்தி நிதிப்பகுதி தொடர்ந்தும் ஈடுபட்டது. இக்கடன்கள் பிரதானமாக தேயிலைத் தொழிற்சாலை நவீனமயமாக்கலின் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. இதன் வெளிநாட்டுச் செலாவணிச் செலவுகள், ஆசிய அபிவிருத்தி வங்கியினல் பெறப்பட்ட கடன்களிலிருந்து நிறைவு செய்யப்பட்டன.